**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், கும்மிடிப்பூண்டி**
**முன்னிலை திரு. R. செந்தில் குமார், M.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கும்மிடிப்பூண்டி**
**2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 02ம் தேதி செவ்வாய்க்கிழமை**
**குற்ற பல்வகை மனு எண். 299/2026**

அமுதராஜ், வ/39, த/பெ. ராமலிங்கம்

..........மனுதாரர் /எதிரி

**/எதிராக/**

தமிழ்நாடு அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
சிப்காட் காவல் நிலையம்,
குற்ற எண்.745/2024

......எதிர் மனுதாரர்/குற்ற முறையீட்டாளர்

இந்த மனுவானது 22.05.2026 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றத்தின் முன்பு விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.எஸ். ரோஸ் குமார், திரு.எம். ஜடராயன், திரு.எம். சுந்தர் அவர்கள் ஆஜராகியும் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை I அவர்கள் ஆஜராகியும் இருதரப்பிலும் கேட்டறிந்து 02.06.2026 அன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

1. மனுதாரர்/ எதிரிக்கு பிணை வழங்ககோரி BNSS பிரிவு 480 ன் கீழ் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.மனுதாரர்/ எதிரி மீது சிப்காட் காவல் நிலைய குற்ற எண்.745/2024 ல் சட்ட பிரிவுகள் 305(a), 331(4) of BNSன் கீழ் வழக்கு பதிவுசெய்யப்பட்டு மனுதாரரான எதிரி கடந்த 22.05.2026ம் தேதியிலிருந்து இன்று வரை 11 நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்றும், மனுதாரர்/எதிரி புலன் விசாரணையில் குறுக்கிடமாட்டார் எனவும், இவ்வழக்கில் மனுதாரருக்கு தக்க பிணையதாரர்கள் உள்ளார்கள் எனவும், நீதிமன்றம் விதிக்கும் எந்த நிபந்தனைக்கும் மனுதாரர் கட்டுப்படுவார் எனவும், ஆகவே, மனுதாரரை பிணையில் விடுவிக்கும்படி கூறப்பட்டது.

3. அரசு தரப்பில் தாக்கல் செய்த பதிலுரையில், கடந்த 18.08.024ம் தேதி அன்று இரவு Emerald Tyres Manufactures Limited கம்பெனியில் இருந்த ரூபாய் 20000 மதிப்புள்ள Machinery Steel Scrap–7 gunny bags பொருட்களை யாரோ அடையாளம் தெரியாத நபர்கள் திருடி சென்றுள்ளதாகவும் அதனை கண்டுபிடித்து தருமாறும் கொடுத்த புகாரின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்டதில் ஏற்கனவே ராபின்சன் குருஸ் என்ற எதிரியை கைது செய்த நிலையில் தலைமறைவு எதிரிகளை கைது செய்ய தனிபடை

அமைத்து தேடி வந்த நிலையில் 22.05.2026ம் தேதி மேற்கண்ட எதிரியை கைது செய்ததாகவும், மேலும் தலைமறைவு எதிரிகளை கைது செய்ய வேண்டியுள்ளதாலும், எதிரிக்கு எதிராக புலன் விசாரணை நிலுவையில் இருப்பதாலும், எதிரியின் மீது பல்வேறு குற்ற வழக்குகள் நிலுவையில் இருப்பதாலும், எதிரிக்கு பிணை வழங்கினால் இதே போன்று குற்ற செயல்களில் ஈடுபடக்கூடும் என்பதாலும், எதிரியை பிணையில்விட கடுமையான ஆட்சேபனை அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:</u>**

பிணை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? அல்லது இல்லையா? என்பதாகும்.

**<u>தீர்வு</u>**

இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது சிப்காட் காவல் நிலைய குற்ற எண்.745/2024 ல் சட்ட பிரிவுகள் 305(a), 331(4) of BNSன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரி கடந்த 22.05.2026ம் தேதியிலிருந்து இன்று வரை 11 நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். மேலும் எதிரி மீது பல்வேறு முன் வழக்குகள் நிலுவையில் இருப்பதாலும், எதிரிக்கு எதிராக புலன் விசாரணை நிலுவையில் இருப்பதாலும், எதிரியை பிணையில் விட்டால் இது போன்ற குற்றங்களை செய்ய வாய்ப்புள்ளது என்பதாலும் எதிரியை பிணையில் விடுவிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததல்ல என குற்றத்தின் தன்மையை கருதி இம்மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,**

**இந்த பிணை மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 02.06.2026ம் தேதி செவ்வாய்க்கிழமை இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

R.Senthil Kumar Digitally signed by R.Senthil Kumar
Date: 2026.06.02 17:27:28 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கும்மிடிப்பூண்டி.